வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : STC 30-2023 Police Station :Velipalayam

வழக்கு சாட்சி : PW-1 (LW-1)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தியாகராஜன் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : பன்னீர்செல்வம் | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 32/2023 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **04.07.2023**

(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை** :

1. நான் தற்சமயம் தெற்கு பொய்கை நல்லூரில் வசித்து தமிழ்நாடு குடிநீர் வாரியம் நாகப்பட்டினம் பிரிவில் உதவி பொறியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஏப்ரல் மாதம் ஒரு நாள் இரவு 10 மணியளவில் வேலை முடித்து விட்டு நான் Unicorn இருசக்கர வாகனத்தில் செல்லூர் சாலையிலிருந்து நாகப்பட்டினம் நோக்கி வந்து கொண்டிருந்த போது எதிர்திசையில் வந்த ஆட்டோ என் மீது மோதி விட்டது.

2. யார் என் மீது மோதினார்கள் என்று தெரியாததால் வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடத்தில் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசா் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ் சாட்சியானதால் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

3. கடந்த 10.10.2020 ந் தேதி அன்று இரவு 10 மணயளவில் நானும், ராகவனும் பணியை முடித்துவிட்டு எங்கள் வண்டியில் வந்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். தாமரைக்குளம் தென்கரை ஆஞ்சநேயர் கோவில் அருகே சம்பவம் நடந்தது என்றால் சரிதான். என் மீது TN 51 AD 0463 என்ற பதிவெண் கொண்ட Splender இருசக்கர வாகனம் தான் மோதியது என்றால் சரியல்ல. ஆட்டோ தான் மோதியது.

4. மேற்படி Splender வண்டியை ஓட்டி வந்த நபர் தான் குடிபோதையில் என்னிடம் தகராறு செய்து என்னை கீழே தள்ளி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அந்த நபர் தான் ஆஜர் எதிரி என்றும் சொன்னால் சரியல்ல. அடையாளம் தெரியாத நபர் என்னிடம் குடிபோதையில் தகராறு செய்து என்னை கீழே தள்ளி கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பான புகாரினை வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான்.

5. ஆஜர் எதிரி தான் அந்த அடையாளம் தெரியாத நபர் என்று பின்னர் தெரிந்து கொண்ட பின்பும் ஆஜர் எதிரி கேட்டு கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

6. எனது முதல் விசாரணையில் கூறியுள்ள படி ஆட்டோ வந்து மோதியதாக தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். புகாரிலும் ஆட்டோ மோதியதாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றும் கையெழுத்து மட்டும் தான் போட்டு கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல

வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : STC 30-2023 Police Station :Velipalayam

வழக்கு சாட்சி : PW-2 (LW-2)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராகவன் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : அழகிரிசாமி | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 44/2023 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **04.07.2023**

(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை** :

1. நான் தற்சமயம் பாலையூரில் வசித்து தமிழ்நாடு குடிநீர் வாரியம் நாகப்பட்டினம் பிரிவில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் ஞாபகம் இல்லை இரவு 11 மணியளவில் நாகப்பட்டினம் செல்லூர் அருகே அ.சா.1ன் இருசக்கர வாகனத்தில் வேறு ஒரு இருசக்கர வாகனம் மோதியதாக கேள்விபட்டேன். வெளிப்பாளையம் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எந்த வாகனம் அ.சா.1ன் வாகனத்தின் மீது மோதியது என்று எனக்கு சரியாக தெரியாமல் வழக்கிற்காக இருசக்கர வாகனம் மோதியது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் இருசக்கர வாகனம் மோதியதாக தான் கேள்விபட்டேன். போலீசார்

விசாரணையிலும் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தற்சமயம் அரசு தரப்பு கேட்டு கொண்டதற்கிணங்க இருசக்கர வாகனம் மோதியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : STC 30-2023 Police Station :Velipalayam

வழக்கு சாட்சி : PW-3 (LW-3)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவகுருநாதன் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : அரங்கசுப்பிரமணியன் | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 29/2023 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **04.07.2023**

(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை** :

1. நான் தற்சமயம் வேதாரண்யம் செட்டிபுலத்தில் வசித்து கீழையூர் காவல் நிலையத்தில் காவலராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 10.10.2020 ந் தேதி அ.சா.1ன் பிறந்தநாள் தினத்தன்று மாலை 6,7 மணியளவில் நாகப்பட்டினம் தாமரைகுளம் அருகே வேலை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ அடித்து கீழே தள்ளிவிட்டதாக கூறி வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் கொடுக்கும் போது நானும் அ.சா.2 ம் அ.சா.1உடன் சென்றிருந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. போலீசார் விசாரணையில் நான் காவலர் என்ற விபரத்தை கூறினேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் புகார் எழுதி கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். வழக்கு விபரம் தெரியாமல் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.